# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆனி 32 செவ்வாய்க்கிழமை 16.07.2024 | கதிர் 302







# தேயிலை ஏற்றுமதி மூலம் பெற்றோல் கடனைக் கட்டுவது நற்செய்தி! மலையில் கொளுந்து பறிக்கும் நமது பெண்களுக்கு நற்செய்தி எப்போது?

## த.மு.கூ. தலைவர் மனோ கனேசன் கேள்வி

"இவ்வாண்டு அதிகரித்த தேயிலை ஏற்றுமதியால், ஈரானிடம் வாங்கிய பெற்றோல் கடனில் 60 மில்லியன் டொலரை மீளச் செலுத்த முடிந்தமையை எண்ணி ஒரு இலங்கையனாக மகிழ்கின்றேன். அது நம் நாட்டுக்கு ஒரு நற்செய்தி. ஆனால், அந்தத் தேயிலையை உற்பத்தி செய்ய ஆண்டாண்டு காலமாக கொழும்பு அவிசாவளை முதல் கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை, கண்டி, பதுளை, நுவரேலியா வரை தேயிலை மலைகளில் நாள் முழுக்க பாடு படும் எங்க குல பெண்களுக்கு நல்ல செய்தி எப்போது வரப் போகின்றது?" – என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கனேசன் எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார்.

2➤



## வைத்தியர் அர்ச்சுனாவுக்கு எதிராக நீதிமன்றத்தில் 5 வழக்குகள் தாக்கல்

### நிபந்தனைகளுடன் பிணையில் விடுவிப்பு

யாழ்ப்பாணம், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் முன்னாள் பதில் வைத்திய அத்தியட்சகரை சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றம் 75 ஆயிரம் ரூபா ஆள்பிணை மற்றும் நிபந்தனைகளுடன் விடுவித்துள்ளது.

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையின் முன்னாள் பதில் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கு எதிராக சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் 5 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அவற்றின் மீதான

2➤



## வாந்தி மற்றும் வீக்க நோய்களுக்கு பயன்படுத்தப்படும் இரண்டு வகை மருந்துகளுக்கு தற்காலிக தடை உத்தரவு!

### சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் பணிப்புரை

வாந்தி மற்றும் வீக்க நோய்களுக்குப் பயன்படுத்தப்படும் டொம்பெரிடோன் மற்றும் பிரட்னிசோலோன் மாத்திரைகளின் பாவனையை நாடளாவிய ரீதியில் அனைத்து அரச வைத்தியசாலைகளிலும் தற்காலிகமாக நிறுத்துமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் பணிப்புரை விடுத்துள்ளதாக வடமத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் பாலித்த பண்டார தெரிவித்துள்ளார்.

மிஹிந்தலை பிராந்திய வைத்தியசாலையில் நேற்று முன்தினம் (14) இளம் வயதுடைய பிள்ளைகள் பன்னிரெண்டு பேருக்கு இந்த இரண்டு வகையான மருந்துகளையும் வழங்கியதில் அவர்கள் ஆபத்தான நிலைக்கு ஆளாகியமையின் காரணமாகவே,

2➤



## தலவாக்கலையில் 4 சிறார்கள் மாயம்



தலவாக்கலை, கிறேட்வெஸ்டன் லூசா தோட்டத்தைச் சேர்ந்த நான்கு சிறார்கள் காணாமல்போயுள்ளார்.

முரளிகிருஷ்ணன் லக்சிக்கா (வயது 16),

2➤

## அழகியல் பாடங்கள் தொடர்பான சர்ச்சை கல்வி அமைச்சு விளக்கம் வெளியிட்டது!

முன்மொழியப்பட்ட கல்விச் சீர்திருத்தங்களுக்கமைய, பொதுக் கல்வியில் அழகியல் பாடங்கள் இன்றியமையாதவை என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அழகியல் பாடங்கள் தொடர்பாக ஊடகங்களில் வெளியாகிய கருத்துக்களுக்கு விளக்கமளிக்கும் வகையில் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப, இடைநிலை மற்றும் உயர்நிலைக் கல்வியில் அழகியல் பாடங்களைக்கற்க முடியும், என கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

க.பொ.த சாதாரண தரம் மற்றும் க.பொ.த உயர்தரப் பரீட்சைகளில் அழகியல் பாடங்களுக்கான பரீட்சைகளுக்கு மாணவர்கள் தோற்ற முடியும் எனவும் கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

உயர் கல்வியிலும் அழகியல் பாடங்களில் மாற்றங்கள் எதுவும் செய்யப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அழகியல் பாடங்கள் தொடர்பாக ஊடகங்களில் வெளியிடப்படும் தவறான கருத்துக்களை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (04)

## அழகியல் பாடங்களை கல்வித்திட்டத்திலிருந்து நீக்குவதற்கான முன்மொழிவுகள் தயாரிப்பு!

### பாடசாலைகளைப் பாதுகாக்கும் மக்கள் இயக்கம் கண்டனம்

இதுவரை காலமும் பாடசாலை முறைமையில் கற்பிக்கப்பட்டு வந்த அழகியல் பாடத்தை நீக்குவதற்கான முன்மொழிவுகளை அதிகாரிகள் தயாரித்துள்ளதாக பாடசாலைகளை பாதுகாக்கும் மக்கள் இயக்கத்தின் செயலாளர் நாகஸ்தென்னே அருண தேரர் தெரிவித்துள்ளார்.

புதிய கல்விச் சீர்திருத்த முன்மொழிவுகளின் பிரகாரம் அதிகாரிகள் இந்த முடிவை எடுத்துள்ளதாகத் தெரிவித்த அவர், இதனால் ஒரு நாடென்ற ரீதியில் நாம் எதிர்காலத்தில் பல பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிடலாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒழுக்கமும் பொறுமையும் கொண்ட மனிதனை கட்டியெழுப்ப அழகியல் பாடங்கள் பெரிதும் உதவியாக இருக்கும் என தெரிவித்துள்ள தேரர், அவ்வாறான

2➤



## தேயிலை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஈரான் நாட்டுக்கான தேயிலை ஏற்றுமதி கடந்த ஆண்டை விட இவ்வாண்டு மும்மடங்கு அதிகரித்தமையால், அந்நாட்டிடம் இருந்து இலங்கை கடனுக்கு வாங்கிய பெற்றோலுக்காகச் செலுத்த வேண்டிய தொகையில் 60 மில்லியன் டொலரை மீளச் செலுத்த முடிந்தமை குறித்து மனோ கணேசன் எம்.பி. மேலும் கூறுகையில்,

"இது ஈரானுக்கு மட்டும் அல்ல. உலகின் பல நாடுகளிடம் இருந்து நாம் வாங்கிய கடன்களுக்கும் பொருந்தும். பல காலமாகவே பொருந்தும். 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றபோது, இலங்கை ஆசியாவில் ஜப்பானுக்கு அடுத்தபடியாக அதிகம் அந்நிய செலாவணி, அதுவும் ஸ்டேர்லிங் பவுண்ட்சில் திறைசேரி இருப்பை கொண்ட நாடாக இருந்தது. இது பற்றி ஜனாதிபதி மிகப் பெருமையாக நாடாளுமன்றத்தில் வந்து சொன்னார்.

அந்த ஸ்டேர்லிங் பவுண்ட்சில் திறைசேரி இருப்பு முழுக்க முழுக்க எங்கள் உழைப்பால் பெறப்பட்டது. இது உண்மை. இது எப்படி? அன்று இலங்கையில் பெருந்தோட்டத்தொழில் துறையைத் தவிர, பெயருக்கு கூட வேறு ஏற்றுமதி தொழில் துறைகள் இருக்கவில்லை. ஆகவே, அன்று முதல் இன்றுவரை கொழும்பு அவிசாவளை தொடக்கம் கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை, கண்டி, பதுளை, நுவரேலியா மலைகளில் நாள் முழுக்க எங்கள் பெண்கள்தான் பாடுபடுகிறார்கள்.

1948ஆம் முதல் நமது மக்களின் உழைப்பை கொண்டு பெற்ற அந்நிய செலாவணி இருப்பை வைத்து தான், மாறி மாறி வந்த இலங்கை அரசு தலைவர்கள் தாராளமாக ஆட்டம் போட்டார்கள். தமது வாக்காள மக்களுக்கு கையை வீசி, இலவசமாக அள்ளி, அள்ளி வழங்கி வாக்குகளைப் பெற்றார்கள். அந்த அரசுகளில் நமது மக்களை பிரதிநிதித்துவம் செய்த பிற்போக்கு பேர்வழிகளும், நமது மக்களை விற்று, சாப்பிட்டு, ஆட்டம் போட்டார்கள்.

இனியாவது மலையகப் பிற்போக்கு அரசியல்வாதிகள், கோமாளிக் கூத்துகளையும், வாய் சவடால்களையும் நிறுத்தி விட்டு, இலங்கை சரித்திரத்தை, பொருளாதார வரலாறுகளைக் கற்றறிந்து, எமது மக்களின் உரிமைகளுக்குக் குரல் எழுப்ப வேண்டும். இந்த நோக்கில் தமிழ் முற்போக்குக் கூட்டணி எவருடனும் கரம் கோர்த்துச் செயற்படத் தயார்.

இன்று நாம் முற்போக்குக் கூட்டணியினராக அரசுக்கு எடுத்துரைக்கின்றோம். இனியும் எங்கள் மக்களை ஏய்த்துப் பிழைக்க முடியாது. எங்கள் உழைப்பால் வரும் வாழ்வு உங்களுக்கு மட்டும்! சாவு மட்டும் எங்களுக்கா? நான் ஒரு இலங்கையன், இதனால், நான் எப்போதும் பெருமையடைகின்றேன். இது பல வருடங்களாக நான் உரக்கக் கூறி வரும் எனது கொள்கை. ஆனால், எனது மக்களை அடகு வைத்து, அதன் மூலம் எனக்கு நாட்டுப் பற்று வேண்டாம் என்பதும் எனது கொள்கை" - என்றார். (05)

## வைத்தியர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விசாரணைகள் இன்று மன்றில் நடைபெற்றன. அதன்போது, வைத்தியர் மன்றில் முன்னிலையாகி இருந்தார்.

வழக்கு விசாரணைகளை அடுத்து, வைத்தியரை 75 ஆயிரம் ஷரூபா ஆள் பிணையில் விடுவித்த மன்று, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்குச் செல்லக்கூடாது, நீதிமன்ற வழக்கு விசாரணைகள் தொடர்பில் முகநூல் நேரலையிலையோ, பதிவுகள் ஊடாகவோ கருத்துத் தெரிவிக்கக் கூடாது உள்ளிட்ட நிபந்தனைகளையும் மன்று விதித்துள்ளது.

அதேவேளை, வைத்தியர் அர்ச்சுனா குற்றஞ்சாட்டிய மற்றைய வைத்தியர்கள் தொடர்பில் ஆதாரங்களுடன் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்குச் சென்று வாக்குமூலங்களை வழங்குமாறும் மன்று கட்டளையிட்டது.

அத்துடன், வைத்தியர் அர்ச்சுனா, பொலிஸ் நிலையத்துக்கு வந்து வாக்குமூலம் அளிக்கத் தவறினாலோ அல்லது ஆதாரங்களைச் சமர்ப்பிக்கத் தவறினாலோ அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறும் பொலிஸாருக்கு மன்று பணித்துள்ளது. (05)

## தலவாக்கலையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ராஜகுரு மிதுஷா (வயது 16), சுந்தர்ராஜ் தர்ஷினி (வயது 16) மற்றும் ராஜகுரு கோபிசாகர் (வயது 15) ஆகியோரே காணாமல்போயுள்ளனர்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை வீட்டிலிருந்து வெளியே சென்ற ஒரு சிறுவனும், மூன்று சிறுமிகளும் வீடு திரும்பவில்லை என அவர்களின் பெற்றோர்களால் முறைப்பாடு ஒன்று நேற்று திங்கட்கிழமை தலவாக்கலை பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அவர்கள் தமது பெற்றோர்களுக்குச் சொல்லாமல் வீட்டிலிருந்து வெளியே சென்ற நிலையில் காணாமல்போயுள்ளனர் என்று பொலிஸாரிடம் மேற்படி பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, இவர்கள் தொடர்பில் தகவல் தெரிந்தால் 0764612289, 0771546724 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்குத் தொடர்புகொள்ளுமாறு பெற்றோர்கள் உதவி கோரியுள்ளனர்.

## வாந்தி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சுகாதார பணிப்பாளர் நாயகம் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக வைத்தியர் பாலித்த பண்டார தெரிவித்துள்ளார்.

மிஹிந்தலை பிரதேசத்தில் வசிக்கும் 06 முதல் 13 வயதுக்குட்பட்ட 12 சிறுவர்கள் வாந்தி எடுத்ததன் காரணமாக நேற்று முன்தினம் (14) அவர்களுக்கு வழங்கப்பட்ட டொம்பெரிடோன் மற்றும் பிரட்னிசோலோன் ஆகிய இரண்டு மருந்துகளையும் பயன்படுத்தியதன் பின்னர் அவர்கள் ஆபத்தான கட்டத்தை அடைந்த நிலையில் அவர்கள் அனுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். (ரேஜ-38)

## அழகியல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விடயத்தை திடீரென நீக்குவதன் மூலம் எதிர்காலத்தில் ரோபோக்கள் போன்ற மனிதர்கள் மாத்திரமே பிறக்கும் அபாயம் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் மூலம் சமூகத்தில் நகைச்சுவை உணர்வு அற்ற ரசனையற்ற மக்கள் கூட்டமொன்றே உருவாகும் எனவும் தெரிவித்துள்ள அவர், கல்வியியலாளர்கள் ஒன்றிணைந்து இவ்விடயத்தை கலந்துரையாடி நாட்டுக்கு நியாயமான தீர்வை முன்வைக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக்கழகக் கல்விக்கு தகுதி பெற்ற மாணவர்கள் குழுவொன்று இதுவரை பல்கலைக்கழகத்திற்கு உள்வாங்கப்படவில்லை என அருண தேரர் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ரேஜ-37)

## பிரபஞ்சம் நிகழ்வில் சஜித்துடன் ரிஷாத்தும் செல்வமும் பங்கேற்பு



பிரபஞ்சம் திறன் வகுப்பறைகளை வழங்கும் திட்டத்தின் 321ஆவது கட்டம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் வன்னித் தேர்தல் மாவட்டம், மன்னார், தேவன்பிட்டிய றோமன் கத்தோலிக்க தமிழ் மகா வித்தியாலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன் எம்.பி. மற்றும் ரெலோ கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. ஆகியோர் கலந்துகொண்டனர்.

## கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு குடும்பஸ்தர் ஒருவர் படுகொலை

மொரட்டுவை, லக்ஷபதிய ரத்துகுருஸ்ஸ வத்த பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு குடும்பஸ்தர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று மொரட்டுவை பொலிஸார் தெரிவித்தனர்.

"பொடி அய்யா" என அழைக்கப்படும் ஹரேந்து குமார என்ற 41 வயதுடைய நபரே கொலை செய்யப்பட்டுள்ளார். இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கொலைச் சம்பவத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மொரட்டுவைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)





செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# திருமலையில் முன்பிள்ளைப்பருவ பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி தேசிய வார நிகழ்வுகள்



(ஹஸ்பர் ஏ.எச்)

முன் பிள்ளைப்பருவ பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி தேசிய வாரத்தினை முன்னிட்டு வீதிப் போக்குவரத்து பாதுகாப்பு பற்றிய அடிப்படை எண்ணக்கருக்கள் பற்றி முன்பள்ளி பிள்ளைகளுக்கு அறிமுகம் செய்துவைத்தல் நிகழ்வானது இன்று திருகோணமலையில் அமைந்துள்ள உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் நடைபெற்றது.

முன் பிள்ளைப்பருவ அபிவிருத்திக்கான தேசிய செயலகம் மற்றும் மகளிர், சிறுவர் அலுவல்கள்மற்றும்சமூக வலுப்படுத்துகை அமைச்சு "மலரும் பிள்ளைகளுக்கு - வழிகாட்டுவோம் " என்ற கருப்பொருளின் கீழ் ஜுலை 14 முதல் ஜுலை 20 வரை முன் பிள்ளைப்பருவ பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி தேசிய வாரமாக கொண்டாடப்பட்டு வருகின்றது. இன்று இரண்டாம் நாளாக இந்நிகழ்வு நடைபெற்றுள்ளது.

கிழக்கு மாகாண சபை மற்றும் மாகாண முன்பள்ளி கல்விப் பணியகம் மற்றும் யுனிசெப் நிறுவனம் ஆகியன இணைந்து இந்நிகழ்வினை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வினை சிறப்பிக்கும் முகமாக சிறுவர்களின் வரவேற்பு நடனம், வீதிப்போக்குவரத்து தொடர்பாக பாடல்களுடன் கூடிய நிகழ்வுகளும் மேடையை அலங்கரித்தன.

முன்பள்ளி பிள்ளைகளிடம் சாலைப் பாதுகாப்பு குறித்த மனப்பான்மையை வளர்ப்பது, பிள்ளையின் ஆரம்ப வளர்ச்சியில் சாலை பாதுகாப்பு பற்றிய அறிவையும் விழிப்புணர்வையும் பகிர்ந்து கொள்ளல், ஆரம்பகால பிள்ளைப் பருவ பராமரிப்பு மற்றும் மேம்பாடு தொடர்பான தரமான சேவைகளைப் பெறல், இலங்கையில் ஆரம்பகால பிள்ளைப் பருவ பராமரிப்பு மற்றும் மேம்பாடு பற்றி அனைத்து பொறுப்புள்ள பங்குதாரர்களிடையே பொதுவான புரிதலை உறுதி செய்தல் போன்ற விடயங்கள் இதன்போது தெளிவூட்டப்பட்டன.

இந்நிகழ்வில் பாலர் பாடசாலைகள் கல்விப் பணியகத்தின் தவிசாளர், வலயக்கல்வி அலுவலகத்தின் பணிப்பாளர், துறைசார் அதிகாரிகள், துறைசார் உத்தியோகத்தர்கள், யுனிசெப் நிறுவனத்தின் உயரதிகாரிகள், பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்கள், பிள்ளைகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தொழில் வழிகாட்டல் செயலமர்வு



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் செயலமர்வு பாடசாலை அதிபர் ஏ.ஜீ.எம். றிசாத் தலைமையில் இடம்பெற்றது.

பாடசாலையின் ஆலோசனை வழிகாட்டல் பிரிவின் பொறுப்பாளர் ஆசிரியர் எம். சீ.ஹிஜாஸின் ஏற்பாட்டில் இச்செயலமர்வு இடம்பெற்றது.

இதில், கல்முனை பிரதேச செயலகத்தின் திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் றிபாத் வளவாளராகக் கலந்து, எதிர்காலத்தில் மாணவர்கள் தங்களுடைய ஆளுமைகளை விருத்தி செய்யக்கூடிய தொழில் தெரிவுகளில் எவ்வாறு ஈடுபடுவது என்பது தொடர்பான விளக்கங்களையும் ஆலோசனைகளையும் வழங்கினார்.




## திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தின் ஆடி அமாவாசை உற்சவம் வியாழனன்று ஆரம்பம்





( வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த ஆடி அமாவாசை உற்சவம் நாளை மறுதினம் 18ஆம் தேதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது என்று ஆலய தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் தெரிவித்தார் . இந்த உற்சவம் 18 நாட்கள் நடைபெற்று ஓகஸ்ட் மாதம் நான்காம் (04) திகதி தீர்த்த உற்சவத்துடன் நிறைவடைய இருக்கின்றது .

ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள் முன்னிலையில் ஆலயகுரு சிவஸ்ரீ அங்குசநாதக்குருக்கள் தலைமையில் உற்சவம் நடைபெறவுள்ளது.

பிதிர்க்கடன் செலுத்துகின்ற ஆடி அமாவாசை உற்சவம் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொள்வார்கள் என்பதற்காக முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தீர்த்தத்தன்று பிதிர்க்கடன் செலுத்துகின்றவர்களுக்கு வசதியாக பத்து சிவாச்சாரியார்கள் உள்ளடக்கி பிதிர்க்கடன் நிறைவேற்றுகின்ற வேலை முன்னெடுக்கப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

மாலைக்கதிர்
Maalaikkathir



# தேர்தலை நடத்துவதற்குரிய ஆரம்பகட்ட பணிகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன!

## தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவிப்பு

18 வயதைப் பூர்த்தி செய்த, வாக்காளர் பட்டியலில் பதிவை மேற்கொண்டுள்ள அனைவருக்கும் தேர்தலில் வாக்களிக்கச் சந்தர்ப்பம் வழங்கப்படும் எனவும், 2024 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலின் பிரகாரம் ஒரு கோடியே 71 லட்சத்து 40 ஆயிரம் பேர் இதுவரை வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.எல்.ஏ. ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.




தேர்தல்கள் ஆணைக்குழுவில் இன்று இடம்பெற்ற விசேட ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்

தேர்தல்கடமைகளுக்கு பயன்படுத்தப்படும் மத்திய நிலையங்கள் தொடர்பாக அரச அச்சகம், பொலிஸ் திணைக்களம், தபால் மா அதிபர் உள்ளிட்ட தரப்பினருடன் தாம் கலந்துரையாடிவருவதாகவும், நாளை நிதியமைச்சின் அதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் போக்குவரத்து, நீர், மின்சாரம் போன்ற சேவைகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் தாம் கலந்துரையாடி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

செப்டெம்பர் 17 ஆம் திகதிக்குப் பின்னர் பொருத்தமான ஒருநாளில் ஜனாதிபதித் தேர்தல் நிச்சயமாக நடத்தப்படும்!, எனவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம்.எல்.ஏ. ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில், தேர்தல்கள் ஆணைக்குழுவில் 5 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக சமூகத்தில் பாரிய எதிர்ப்பார்ப்பு காணப்படுகின்றது.

இந்த நாட்டில் பல தடவைகள் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்றுள்ள போதிலும் இம்முறை பாரிய எதிர்ப்பார்ப்புக் காணப்படுகின்றது. அரசியலமைப்பின் பிரகாரம் செப்டெம்பார் 17 முதல் ஒக்டோபர் 16 ஆம் திகதிக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும். எனவே 63 நாட்களுக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும். தேர்தல் திகதியைத் தீர்மானிக்கையில் வேட்புமனுத் தாக்கல் செய்வது முதல் பிரசாரங்களை மேற்கொள்ள வேட்பாளர்களுக்கு கால அவகாசம் வழங்க வேண்டும்.

தேர்தல் கடமைகளில் ஈடுபடும் அதிகாரிகள் முன்னாயத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்கும் கால அவகாசம் தேவைப்படுகின்றது. இவை அனைத்தையும் கருத்திற்கொண்டே திகதி தீர்மானிக்கப்படும்.

இந்த மாதம் நிறைவடைவதற்குள் தேர்தல் நடத்தப்படும் திகதியை நாம் அறிவிப்போம். தேர்தல் திகதியை தீர்மானிப்பதற்கு வேறு எந்த இடையூறுகளும் இல்லை. தேர்தல் திகதியை தீர்மானிப்பதில் நாம் பாரபட்சமாகச் செயற்படவில்லை. அரசியலமைப்பின் பிரகாரமே செயற்படுவோம். செப்டெம்பர் 17 ஆம் திகதியின் பின்னர் பொருத்தமான ஒருநாளில் தேர்தல் நடத்தப்படும், என்று தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பின் பிரகாரம், ஜனாதிபதித் தேர்தலை அறிவிக்கும் அதிகாரம் இன்று நள்ளிரவுடன் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குக்கிடைக்கப்பெறுகின்ற நிலையிலேயே இன்றைய தினம் குறித்தஇந்த விசேட ஊடகச் சந்திப்பு இடம்பெற்றிருந்தது. (04)





# யாழ். மாவட்ட செயலகத்துக்கு முன்பாக வேலையற்ற பட்டதாரிகள் போராட்டம்

வடக்கு மாகாண பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்திற்கு முன்பாக இன்று காலை கவனயீர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

தேங்காய் உடைத்து போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அனைத்து பட்டதாரிகளுக்கும் பாரபட்சமின்றி வேலைவாய்ப்பை வழங்க வேண்டும் என்று இதன்போது வேலையில்லாப் பட்டதாரிகள் வலியுறுத்தியிருந்தனர்.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், “பட்டம் வீட்டில் பட்டதாரிகள் நடு றோட்டில், ஒரே ஒரு பரீட்சையில் பறந்து போனது பல பரீட்சை எழுதிப் பெற்ற பட்டம், வேண்டும் வேண்டும் நீதி வேண்டும், எமக்கான வாழ்க்கையை நாம் எப்போது வாழ்வது?, படிப்புக்கும் போராட்டம் வேலைக்கும் போராடுவதா?, எல்லோருக்கும் பாரபட்சமின்றி வேலைகளை வழங்க வேண்டும், படித்ததற்குக் கூலித் தொழிலா கடைசி வரைக்கும்?, படித்தவர்கள் இந்த நாட்டின் சாபக்கேடுகளா?, பல வருட கனவு வெறும் கனவாகவே போய்விடுமா?, படித்தும் பரதேசிகளாகத் திரிவதா?” எனப் பல்வேறுபட்ட வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி போராட்டத்தை முன்னெடுத்தனர்.

# தயாசிறி ஜயசேகரவின் மனுக்களை விசாரிக்க கொழும்பு மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டது!



பாராளுமன்ற உறுப்பினர்தயாசிறிஜயசேகரவினால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன உள்ளிட்டோருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு முறைப்பாடுகளை எதிர்வரும் 23 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள கொழும்பு மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராகப் பணியாற்றிய தமது கட்சி உறுப்புரிமையை ரத்துச் செய்ய எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு எதிராக தயாசிறி ஜயசேகரவினால் இந்த முறைப்பாடுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த முறைப்பாடுகள் தொடர்பான இடைக்காலக் கோரிக்கைகள் மீதான உத்தரவு இன்று அறிவிக்கப்படவிருந்தது.

ஆனால், எதிர்த்தரப்பு சமர்ப்பித்த ஆவணங்கள் வழக்குப் பதிவில் சேர்க்கப்படவில்லை என்று நீதவான் தெரிவித்தார்.

அதன்படி, உரிய ஆவணங்களைத் தாக்கல் செய்ய இருதரப்புக்கும் அனுமதி அளித்த நீதிமன்றம், வழக்கை வரும்23ஆம்திகதி மீண்டும்அழைக்குமாறு உத்தரவிட்டது.

# போதைப்பொருள் பாவனையைத் தடுத்தல் மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு





(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கிழக்கு மாகாணத்தில் போதைப்பொருள் பாவனையைத் தடுக்கும் விழிப்புணர்வு செயற்றிட்டத்தை கல்வி அமைச்சுடன் இணைந்து கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நேற்று ஆரம்பித்து வைத்தார்.

முதல் கட்டமாக இடம்பெற்ற இவ்விழிப்புணர்வு நிகழ்வு, மூதூர் சோனையூர் கல்லூரி, ஸ்ரீ ஹன்பஹா வித்தியாலயம், இலங்குதுறை முகத்துவாரம் இந்து கல்லூரி ஆகிய பாடசாலைகளில் இடம்பெற்றது.

ஏராளமான மாணவர்கள் ஆர்வத்துடன் இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்.

## விக்டோறியஸ் விளையாட்டுக் கழகத்தின் 42ஆவது ஆண்டு நிறைவுப் போட்டிகள்





(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை விக்டோறியஸ் விளையாட்டுக் கழகத்தின் 42ஆவது ஆண்டு நிறைவினையொட்டி கடின பந்து சுற்றுப் போட்டி மற்றும் புதிய கிறிக்கட் சீருடை அறிமுக விழா என்பன கல்முனை சந்தாங்கேணி ஐக்கிய பொது விளையாட்டு மைதானத்தில் சிறப்பாக இடம பெற்றன.

மேற்படி நிகழ்வில் இடம்பெற்ற சினேக பூர்வ கிறிக்கட் போட்டியில் கல்முனை விக்டோறியஸ் மற்றும் கிண்ணியா நோவா கழகங்கள் பலப்பரீட்சையில் கலந்து கொள்ள விக்டோரியஸ் கழகம் வெற்றிவாகை சூடிக்கொண்டது.

நிகழ்வில் பிரதம அதிதிகளாக ஜனரஜ சுகாதார சங்கத்தின் கிழக்குமாகாண கௌரவ தலைவர் எஸ்.ஏ.உபீர மமற்றும் காத்தான்குடி ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டொக்டர் எம்.எஸ்.எம்.ஜாபிர் மற்றும் சிறப்பு அதிதிகளாக கல்முனை விக்டோறியஸ் விளையாட்டுக் கழக தவிசாளர் பெஸ்டர் குழும பணிப்பாளர் ஏ.எம். றியாஸ் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

விசேட அதிதிகளாக ஜெனுவீன் மோட்டார் நிறுவனர் விக்டோறியஸ் பிரதி தலைவர் ஏ.மன்சூர், கல்முனை டீஎப்சிசி வங்கி உதவி முகாமையாளர் தேவமுரளி , மட்டக்களப்பு செலான்வங்கி உத்தியோகத்தர் ஜகோப், ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக பதிவாளர் ஹிபதுல் கரீம், தாதி உத்தியோகத்தர் பாயிஸ், நோவா கழகத் தலைவர் மிஹ்ளார் , கல்முனை அஷ்ரஃப் ஞாபகார்த்த வைத்தியசாலை யூனியன் தலைவர் ஜலீல், பிர்ளியன் விளையாட்டுக்கழக தலைவர் பளீல், விக்டோறியஸ் கழக பொதுச் செயளாளர் ஏ.ஜே.எம்.சமீம், கழக முகாமையாளர் சபீர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## குடிசன மதிப்பீட்டு நடவடிக்கைகள் தொடர்பிலான தெளிவூட்டல் நிகழ்வு

(ஹஸ்பர் ஏ.எச்)

குடிசன வீட்டு வசதிகள் தொகை மதிப்பில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கையாக அமைந்துள்ள கணக்கெடுக்கும் கட்டத்தின் பயிற்சிகள் மற்றும் கள நடவடிக்கையினை ஆரம்பிப்பதற்கு முன்பாக, மாவட்டம் மற்றும் பிரதேச செயலகங்களில் தொகை மதிப்பு நடவடிக்கையினை வழிகாட்டும் சிரேஷ்ட நிர்வாக உத்தியோகத்தர்களான தொகை மதிப்பு ஆணையாளர், பிரதி மற்றும் உதவித் தொகைமதிப்பு ஆணையாளர்களுக்கான தெளிவூட்டல் நிகழ்வானது இன்று திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி அவர்களின் தலைமையில் மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

புள்ளி விபரத்திணைக்களத்தின் வெளிக்கள முகாமைத்துவ பிரிவு மற்றும் மாதிரி அளவீட்டுப்பிரிவின் பணிப்பாளரினால் மாவட்ட அரசாங்க அதிபரின் சேவையினை பாராட்டி நினைவு சின்னம் இதன்போது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அறிமுகம், தொகைமதிப்பின் கட்டங்கள், தொகைமதிப்பின் ஒழுங்கமைப்புக் கட்டமைப்புக்கள், கணக்கெடுத்தல், தொகைமதிப்பில் சேகரிக்கப்படும் தகவல்கள், தொகைமதிப்பு உத்தியோகத்தர்களின் வகிபாகங்கள், கால அட்டவணை போன்ற பல விடயங்கள் இதன்போது தெளிவூட்டப்பட்டன.

இதன்போது மாவட்ட பிரதம கணக்காளர் ப.ஜெயபாஸ்கர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி கே.விஜயதாசன், புள்ளி விபரத்திணைக்களத்தின் வெளிக்கள முகாமைத்துவ பிரிவு மற்றும் மாதிரி அளவீட்டுப்பிரிவின் பணிப்பாளர் எஸ்.எச். மன்சூர், புள்ளி விவரத்திணைக்களத்தின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பியலால் அரச குலரத்ன, பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், கணக்காளர்கள் உட்பட புள்ளி விபரத்திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# இடத்திற்கிடம் சுவரொட்டிகளை ஒட்டுவதன் மூலம் பாதாள குழுக்கள் கடைசி நாடகத்தை நடத்துகின்றன

## பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவிப்பு

நாடு பூராவும் சுவரொட்டிகளை ஒட்டி பாதாள உலகம்தனது கடைசிநாடகத்தை நடத்தி வருவதாக பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார். கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் இடம்பெற்ற பொலிஸ் பரிசோதகர்கள் சங்க செயலமர்வின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேற்படி சுவரொட்டிகளை ஒட்டிய பாதாள உலகக் குழுக்களை கண்டுபிடிப்பதற்கான விசாரணைகளை பொலிஸார் ஏற்கனவே ஆரம்பித்துள்ளதாகவும் பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

குற்றவாளி கும்பல்களுக்கிடையே கொலைப் போரொன்று தொடங்கியுள்ளதாகவும், ஒருவர் கொலையாகும் போது மற்றவர் மகிழ்ச்சி அடையும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும், அவ்வாறான நிலையில் மற்றொரு பாதாள உலகக் குழுவொன்று தலை தூக்கும் எனவும் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

கடந்த சில மாதங்களில் திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபட்ட கும்பல்களை சேர்ந்த 800 க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், அளவிற்கு அதிகமாக துள்ளுபவர்களுக்கு பொலிஸார் தகுந்த பாடத்தை கற்பிப்பர் எனவும் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். (ரெஜ-39)



# மின்சாரக் கட்டணத்தின் குறைவினையடுத்து உணவுப் பொருட்களின் விலைகளிலும் மாற்றம்



பிரைட் ரைஸ், கொத்து, சோற்றுப் பொதி ஆகியவற்றின் விலைகள் 25 ரூபாவினால் குறைக்கப்படவுள்ளதாக அகில இலங்கை உணவக மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஹர்ஷன ருக்ஷான் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பரோட்டா மற்றும் முட்டை ரொட்டி உள்ளிட்ட சிற்றுண்டிகளின் விலை 10 ரூபாவினால் குறைக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மின்சாரக் கட்டணத் திருத்தத்தின் அடிப்படையில் உணவுகளின் விலைகளைக் குறைக்க அகில இலங்கை உணவக மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

இதேவேளை திருத்தப்பட்ட இரண்டாவது மின் கட்டணத் திருத்த விபரத்தை பொதுப் பயன்பாட்டு ஆணையம் நேற்று அதிகாரப்பூர்வமாக அறிவித்திருந்தது

அதன்படி இந்த ஆண்டுக்கான இரண்டாவது மின் கட்டண திருத்தம் 22.5 வீதமாகும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.







## பாவனையாளர்கள் கோரும் பட்சத்தில் மின்சாரக் கட்டண பட்டியலை அச்சுப் பிரதியில் வழங்குவது கட்டாயமாகும்

**மின்சார சபைக்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நிபந்தனை விதிப்பு**

பாவனையாளர்கள் கேட்கும் பட்சத்தில் அச்சிடப்பட்ட மின்சாரக் கட்டண பட்டியலை வழங்குவது கட்டாயம் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. புதிய மின்சார கட்டண திருத்தத்துடன் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இலங்கை மின்சார சபைக்கு விதித்துள்ள ஏழு நிபந்தனைகளில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாடிக்கையாளரின் கோரிக்கையின் பேரில் நீடித்து நிலைத்து நிற்கும் வகையிலான அழியாத வகையிலான அச்சடிக்கப்பட்ட மின்சார கட்டண பட்டியலை வழங்குவது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் உறுப்பினர் டக்ளஸ் நாணயக்கார தெரிவித்துள்ளார்.

மின் கட்டண பட்டியல் ஒரு சொத்து அல்லது ஆவணம் எனவும், பிள்ளைகளுக்கு பாடசாலை அனுமதி பெறல், வசிப்பிடத்தை உறுதிப்படுத்தல் போன்றவற்றிற்கு மின்கட்டண பட்டியல் தேவை என்பதால் பொதுமக்களின் கோரிக்கையை கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

2030 ஆம் ஆண்டு வரையிலான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டுத் திட்டங்களை தயாரித்து சமர்ப்பித்தல், 2023 ஆம் ஆண்டின் கடைசி காலாண்டின் செலவுகள் தொடர்பாக ஒரு விரிவான சுயாதீன கணக்காய்வு அறிக்கையை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்தல் போன்றனவும் மின்சார சபைக்கு விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுள் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (ரெஜ-40)

## யுனெஸ்கோ பணிப்பாளர் இலங்கைக்கு விஜயம்!



யுனெஸ்கோவின் பணிப்பாளர் நாயகம் ஓட்ரி அசோலே இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

இலங்கை, யுனெஸ்கோவில் அங்கத்துவம் பெற்று 75 ஆண்டுகள் பூர்த்தியானதை முன்னிட்டு அவரது இந்தப் பயணம் அமைந்துள்ளதாகத் தெரியவருகிறது.

இன்று முதல் எதிர்வரும் 19 ஆம் திகதி வரையில் இடம்பெறும் சிறப்பு நிகழ்வுகளில் அவர் பங்கேற்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD
PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக
உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
jride
JRide - Beyond the Road
JRide Driver: Drive & Deliver
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN
EASILY
REGISTER &
BOOK
YOUR RIDE
Google Play
App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை
பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க
ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver
செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து
உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD
DRIVER APP:
YOU CAN
EASILY
REGISTER
& ADD YOUR
VEHICLE
Google Play
App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே
புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து
வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp
மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!